பூந்தளிர் அமர் சித்திரக்கதை

COMICS PDF TIMES

No. 29

துரோணரின் வருகை

மகாபாரதம் · 5

AMAR CHITRA KATHA

11 KRISHNA
12 SHAKUNTALA
13 THE PANDAVA PRINCES
14 SAVITRI
15 RAMA
16 NALA DAMAYANTI
17 HARISCHANDRA
18 THE SONS OF RAMA
19 HANUMAN
20 MAHABHARATA
21 CHANAKYA
22 BUDDHA
23 SHIVAJI
24 RANA PRATAP
25 PRITHVIRAJ CHAUHAN
26 KARNA
27 KACHA
28 VIKRAMADITYA
29 SHIVA PARVATI
30 VASAVADATTA
31 SUDAMA
32 GURU GOBIND SINGH
33 HARSHA
34 BHEESHMA
35 ABHIMANYU
36 MIRABAI
37 ASHOKA
38 PRAHLAD
39 PANCHATANTRA I
40 TANAJI
41 CHHATRASAL
42 PARASHURAMA
43 BANDA BAHADUR
44 PADMINI
45 JATAKA TALES I
46 VALMIKI
47 GURU NANAK
48 TARABAI
49 RANJIT SINGH
50 RAM SHASTRI
51 RANI OF JHANSI
52 ULOOPI
53 BAJI RAO I
54 CHAND BIBI
55 KABIR
56 SHER SHAH
57 DRONA
58 SURYA
59 URVASHI
60 ADI SHANKARA
61 GHATOTKACHA
62 TULSIDAS
63 SUKANYA
64 DURGADAS
65 ANIRUDDHA
66 ZARATHUSHTRA
67 THE LORD OF LANKA
68 TUKARAM
69 AGASTYA
70 VASANTASENA
71 INDRA & SHACHI
72 DRAUPADI
73 SUBHADRA
74 AHILYABAI HOLKAR
75 TANSEN
76 SUNDARI
77 SUBHAS CHANDRA BOSE
78 SHRIDATTA
79 JATAKA TALES II
80 VISHWAMITRA
81 THE SYAMANTAKA GEM
82 MAHAVIRA
83 VIKRAMADITYA'S THRONE
84 BAPPA RAWAL
85 AYYAPPAN
86 ANANDA MATH
87 BIRBAL THE JUST
88 GANGA
89 GANESHA
90 CHAITANYA MAHAPRABHU
91 HITOPADESHA I
92 SAKSHI GOPAL
93 KANNAGI
94 NARSINH MEHTA
95 JASMA OF THE ODES
96 SHARAN KAUR
97 CHANDRAHASA
98 PUNDALIK & SAKHU
99 RAJ SINGH
100 PURUSHOTTAM DEV & PADMAVATI
101 VALI
102 NAGANANDA
103 MALAVIKA
104 RANI DURGAVATI
105 DASHARATHA
106 RANA SANGA
107 PRADYUMNA
108 VIDYASAGAR
109 TACHCHOLI OTHENAN
110 SULTANA RAZIA

Acquaint your children with their cultural heritage

111 SATI & SHIVA
112 KRISHNA & RUKMINI
113 RAJA BHOJA
114 GURU TEGH BAHADUR
115 PARIKSHIT
116 KADAMBARI
117 DHRUVA & ASHTAVAKRA
118 KING KUSHA
119 RAJA RAJA CHOLA
120 DAYANANDA
121 VEER DHAVAL
122 ANCESTORS OF RAMA
123 EKANATH
124 SATWANT KAUR
125 UDAYANA
126 JATAKA TALES III
127 THE GITA
128 VEER HAMMIR
129 MALATI & MADHAVA
130 GARUDA
131 BIRBAL THE WISE
132 RANAK DEVI
133 MARYADA RAMA
134 BABUR
135 DEVI CHOUDHURANI
136 RABINDRANATH TAGORE
137 SOORDAS
138 PANCHATANTRA II
139 PRINCE HRITADHWAJA
140 HUMAYUN
141 PRABHAVATI
142 CHANDRA SHEKHAR AZAD
143 A BAG OF GOLD COINS
144 PURANDRA DASA
145 BHANUMATI
146 VIVEKANANDA
147 KRISHNA & JARASANDHA
148 NOOR JAHAN
149 ELEPHANTA
150 TALES OF NARADA
151 KRISHNADEVA RAYA
152 BIRBAL THE WITTY
153 MADHVACHARYA
154 CHANDRA GUPTA MAURYA
155 JNANESHWAR
156 BAGHA JATIN
157 MANONMANI
158 ANGULIMALA
159 THE TIGER AND THE WOODPECKER
160 TALES OF VISHNU
161 AMRAPALI
162 YAYATI
163 PANCHATANTRA III
164 TALES OF SHIVA
165 KING SHALIVAHANA
166 THE RANI OF KITTUR
167 KRISHNA & NARAKASURA
168 THE MAGIC GROVE
169 LACHIT BARPHUKAN
170 INDRA AND VRITRA
171 AMAR SINGH RATHOR
172 KRISHNA & THE FALSE VASUDEVA
173 KOCHUNNI
174 TALES OF YUDHISHTHIRA
175 HARI SINGH NALWA
176 TALES OF DURGA
177 KRISHNA AND SHISHUPALA
178 RAMAN OF TENALI
179 PAURAVA AND ALEXANDER
180 INDRA AND SHIBIRAJA
181 GURU HAR GOBIND
182 THE BATTLE FOR SRINAGAR
183 RANA KUMBHA
184 ARUNI AND UTTANKA
185 HITOPADESHA II
186 TIRUPPAN & KANAKADASA
187 TIPU SULTAN
188 DR AMBEDKAR
189 THUGSEN
190 KANNAPPA
191 THE KING IN A PARROT'S BODY
192 RANADHIRA
193 KAPALA KUNDALA
194 GOPAL & THE COWHERD
195 JATAKA TALES IV
196 HOTHAL
197 THE RAINBOW PRINCE
198 TALES OF ARJUNA
199 CHANDRALALAT
200 AKBAR

Available at
PAI & CO.
Ernakulam, Calicut, Madras, Trivandrum
And all other Leading Book Sellers

MAHABHARATA- 5

© IBH Publishers Pvt. Ltd. 1980. The Tamil Edition published by arrangement with IBH Publishers Pvt. Ltd., Mahalaxmi Chambers, 22, Bhulabhai Desai Road, Bombay-400 026.

Editor: **Anant Pai** *Script:* **Kamala Chandrakant & T. M. P. Nedungadi**
Art works: **Dilip Kadam**



காபாரதம் –5
ரோணரின் வருகை
ரத வம்சத்தின் வரலாறான வேத-
வியாசர் இயற்றிய மகாபாரத இதி
சம் அவரது சீடரான வைசம்பா-
னரால் தவசிரேஷ்டர்களின்முன்-
ல் படனம் செய்யப்பட்டது.
யாசபகவானின் பேரனுக்குப் பேர-
ன ஜனமே ஜயனின் சர்ப்ப
த்ர யாக பூமியில் முனிவர்களின்
ன்னிலையில் இப்படனம்
டைபெற்றது.
5 காவது நாள் கதையில்-
ண்டவ குமாரர்களுடன் குந்தி
ஸ்தினபுரம் வந்ததையும்,
ண்டவர்களின் வல்லமையில்
யோதனதியர் பொறாமை கொண்ட
தையும், திருதராஷ்டிரன் அரச
மாரர்களை கிருபாசார்யரிடம்
குல வாசத்துக்கு அனுப்பியது
றை வைசம்பாயனர் படனம்
சய்தார்.





COMICS PDF TIMES

கிருபர் அஸ்திரவித்தையில் வல்லவராகி, கௌரவ, பாண்டவ, யாதவ மற்றும் பல தேச ராஜகுமாரர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கும் ஆசிரியராகிறார்.

ஆனால் பீஷ்மர் தன் பேரக்குழந்தைகளு-க்கு சிறந்ததோர் வீரனே குருவாக வேண்டுமென்று துரோணரை ஆசா-னாக்கினார்.


துரோணரைப் பற்றி, அவர் எப்-படி குரு நாட்டு-க்கு வந்தார். என்பதை விரி வாகக் கூறுங் கள். முனிவரே.
வல்லமைமிக்க பரத்வாஜ முனிவரின் மகனாக அவதரித்தார் துரோணர்.
பரத்வாஜர், அக்னேயாஸ்தி-ரத்தின் ரகசிய-த்தை அக்னி வேசமுனிவரிடமி-ருந்து அறிந்து வர துரோணரை அனுப்பினார்.
துரோணருக்கு அந்த அரிய அஸ்-திரத்தையும் வேறு பல அஸ் திரங்களையும் கற்பித்தார் அக்னிவேசர்.



COMICS PDF TIMES

மன்னனே! ஜமதக்னியின் மகனும், தன் எதிர்களின் வைரியுமாக விளங்கிய பரசுராமர் தன் செல்வங்களையெல்லாம் தகுதியுடைய பிராம்மணர்களுக்குத் தானமாக வழங்குவதை அறிந்து, மகேந்திர பர்வதத்திலுள்ள அவரிடம் நம்பிக்கையோடு சென்றார் துரோணர்.
மகேந்திர பர்வதம் போய் பரசுராமனைக் கண்டு...
.. அவரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.
பிறகு கூறினார்.
என் பெயர் துரோணன். பிறவியால் அந்தணன். பெண்ணின் சேர்க்கையின்றி பரத்வாஜ முனிவருக்கு மகனானவன்.
அவர் வார்த்தைகளைக் கேட்ட பரசுராமர் -
பிராம்மணோத்தமரே! உம் விருப்பம் என்ன?

COMICS PDF TIMES


பரத்வாஜரின் மகனான துரோணர் பாஞ்சால மன்னன் துருபதனின் அவையை அடைந்தார்.
உன் தோழனை நினைவிருக்கிறதா?
பணம், பதவிகளின் செருக்கால் மமதை கொண்ட பாஞ்சால மன்னன் எடுத்தெறிந்து பேசினான்.
பிராம்மணனே! என்னை உன் தோழன் என்கிறாயே, உன் அறிவு முதிர்ச்சியற்றது. பண்பாடு இல்லாதது.
துரதிர்ஷ்டசாலியும் ஏழையுமான உன் போன்றவனை மாமன்னர்கள் நண்பனாகக் கருத மாட்டார்கள் என்பது கூடத் தெரியவில்லையே உனக்கு.
முன்பு நாம் தோழர்களாக இருந்திருக்கலாம். அந்தச் சூழ்நிலையில் நாம் சமமாக இருந்ததினால்.

COMICS PDF TIMES

ஹஸ்தினபுரத்தில் துரோணர், கிருபி, அஸ்வத்தாமாவுடன் தன் மைத்துனன் கிருபாசாரி-யாரின் வீட்டில் பல்லாண்டுகள் வாழ்ந்து வந்தார்.
ஒரு நாள் ஹஸ்தினபுரத்து இளவரசர்கள் நகருக்கு வெளியே கிட்டிப்புள் விளையாடப் போனார்கள்.
அப்போது கிட்டிப்புள் குச்சி ஓர் ஆழமான கிண-ற்றில் விழுந்தது.
அதை எடுக்க முடியாமல் வெட்கத்துடன் நிற்கும் போது அங்கு ஒரு பிராம்மணர் வந்தார்.
அவர் துரோணர்தான். தன்னை சூழ்ந்து கொண்ட அவர்களிடம் துரோணர் கூறினார்.
குச்சியை எடுக்கஇய-லாத பரதக்குலத்தோன்-றல்களே! உங்கள் வீரமும், வில் வித்தை-யும் இவ்வளவுதானா?

எனக்கு நீங்கள் உணவளிப்பதானால் உங்கள் குச்சியை மட்டுமல்ல...
..இதோ, கிணற்றில் போடும் என் மோதிரத்-தையும் எடுத்துத் தருகிறேன்.
துரோணர் தன் மோதிரத்தைக் கிணற்றில் போட்டார்.
பாண்டவர்களின் மூத்தவரான யுதிஷ்டிரன் கூறினான்.
அந்தணரே! கிருபாசாரியார் அனு-மதித்தால் நாங்கள் தினமும் உமக்கு உணவளிக்கி-றோம்.
துரோணர் சிரித்தபடி ஒரு கொத்துப் புல்லைப் பறிக்கிறார்.
அஸ்திரங்களுக்கு உரிய மந்திரங்களை இப்புல்லில் பிர-யோகித்து...

புல்லை ஒன்றன் பின் ஒன்றாகச் செலுத்தி சங்கிலியாக்கி உங்கள் கிட்டிப்புள்ளை வெளி-யில் கொண்டு வரு-கிறேன்.
துரோணர் கிட்டிப்புள்ளை வெளியில் எடுத்ததும் இளவரசர்கள் வியந்து போனார்கள்.
அந்தணரே! மோதிரத்தை-யும் எடுங்-கள்.
மோதிரத்தை நோக்கி ஓர் அம்பை எய்து அதைக் கிணற்றிலிருந்து மீட்ட துரோணர்..
.. பிரமிப்புற்ற இளவரசர்-கள் முன் நீட்டினார்.
அவர்கள் கூறினார்.
அந்தணரே, உம்மை வணங்கு-கிறோம். இத்தகைய வல்லமை பெற்ற நீங்கள் யார்? உங்களுக்கு நாங்-கள் என்ன செய்ய?
துரோணர் கூறினார்
பீஷ்மரிடம் போய் நடந்ததைக் கூறுங்கள். என்னை அவர் தெரிந்து கொள்வார்.

இளவரசர்கள் கூறியதைக் கேட்ட பீஷ்மர், அவ்வந்தணர் துரோணரே என்றறிந்து இளவரசர்களுக்கு ஏற்ற குரு அவரே என்ற முடிவோடு, தானே நேரில் போய் அவரை அழைத்து வந்தார்.
பிறகு இங்கு வந்ததற்கான காரணத்தை பீஷ்மர் அவரிடம் கேட்டார்.
துரோணர் கூறினார்.
பீஷ்மரே! வெகு நாள் முன்பு அக்னிவேசரிடம் நான் ஆயுதப் பயிற்சி பெறப் போனேன்.
சிறு வயது முதல் என் தோழனான பாஞ்சால இளவரசன், துருபதனும் அங்கிருந்தான்.
அவன் அடிக்கடி என்னை மகிழ்விக்கக் கூறுவான்.
துரோணா, என் தந்தைக்குப் பிறகு நான் பாஞ்சால மன்னனாகும் போது என் செல்வம் உன் செல்வம். இது சத்தியம்.
பல ஆண்டுகளுக்குப் பிறகு, என் மகன் அஸ்வத்தாமன் மற்ற குழந்தைகள் பால் குடிப்பதைக் கண்டு தனக்கும் வேண்டுமென்று அழுதான்.

அவன் தோழர்களில் சிலர், அரிசி மாவை நீரில் கரைத்து பால் என்று கூறிக் கொடுத்தார்கள் - மொற்ற.
பால் குடித்ததாக எண்ணி குதூகலப்-பட்டுக் குதித்துக் கொண்டு வந்தான் குழந்தை.
பால் குடிச்சேனே! பால் குடிச்சேனே!
அந்தக் காட்சி என்னை உலுக்கி விட்டது.
மக்கள் பேச்சைக் கேட்டேன்.
வெட்கக்கேடு. செல்வம் சேர்க்க வகையில்லாத இந்தத் துரோணனின் குழந்தை அரிசி மாவுக் கரைசலைக் குடித்து விட்டு ஆனந்தக் கூத்தாடுகிறது.

பீஷ்மரே! அன்றே மனைவியுடன் பாஞ்சால மன்னனிடம் போனேன் மிக்க ஆசையோடு.
நட்பை எண்ணி, இளமையாகப் பேசி அளித்த வாக்குறுதிகளை நினைத்த படி நம்பிக்கையோடு நண்பனிடம் போனேன்.
ஆனால் துருபதன் என்னைப் பிச்சைக்காரனாக எண்ணி ஏளனமாகச் சிரித்தான்.
வெளியேறிய நான் குரு வமிசத்தவர்களைச் சீடர்களாக்கிக் கொள்ள வந்துள்ளேன். உங்கள் உத்தரவை எதிர்பார்க்கிறேன்.
பீஷ்மர் அவரிடம் கூறினார்.
குரு இளவரசர்களை வில் வித்தையில் வல்லவர்கள் ஆக்க உங்கள் ஆற்றல் பயன்படட்டும்.

அந்தணரே! என்றும் குரு வமிசத்தவர் உங்கள் பக்கமிருப்பர் உங்கள் விருப்பம் நிறைவேறியதாகவே கருதுங்கள்.
உங்கள் வருகையை எங்கள் அதிர்ஷ்டமாகக் கருதுகிறோம்.
துரோணருக்கு சகல வசதிகளும் செல்வமும் கொண்ட ஒரு அரண்மனையளித்தார் பீஷ்மர்.
ஏராளமான வெகுமதிகளுடன் தன் பேரக்குழந்தைகளையும் துரோணரிடம் ஒப்படைத்தார்.


துரோணர் மகிழ்வோடு இளவரசர்களை ஏற்று, கூறினார்.
எனக்கொரு குறிக்கோளுள்ளது. உங்களை ஒப்பற்ற வீரர்களாக்கியதும் எனக்கு உதவுவதாக வாக்களிக்கவும்.
மற்ற குரு இளவரசர்கள் மௌனமாக இருக்க, ஆசிரியரின் குறிக்கோள் என்ன என்பதைக் கேட்காமலேயே அர்ஜுனன் வாக்களித்தான் உதவுவதாக. துரோணர் அவனைத் தழுவிக் கொண்டார்.
துரோணர் தம் அஸ்திர வித்தைகள் அனைத்தையும், அதன் ரகசியங்களையும் பாண்டவர்களுக்குப் போதித்தார். அண்டை நாட்டு இளவரசர்களுடன் தேர்ப்பாகனின் வளர்ப்பு மகனான கர்ணனும் பயிற்சி பெற வந்தான்.
மாணவர்களிடம் மண் பாண்டங்களைக் கொடுத்து நீர் கொண்டு வரச் சொல்லுவார். தன் மகன் அஸ்வத்தாமனிடம் மட்டும் வாயகன்ற குடமாகக் கொடுப்பார். விரைவில் வர, முதலில் திரும்பும் அவனுக்கு மட்டும் விசேஷமான சில பயிற்சிகளைக் கற்றுத் தருவார்.
இதை அறிந்த அர்ஜுனன், வருணனை தியானித்து, தன் குடத்தை நிரப்பிக் கொண்டு அஸ்வத்தாமனுடனேயே திரும்பலானான்.
அர்ஜுனன் வில்வித்தையில் விசேஷ ஈடுபாடு காட்டுவதைக் கண்ட துரோணர் சமையல்காரனை அழைத்துக் கூறினார்.
இருட்டில் அர்ஜுனனுக்கு உணவு படைக்காதே. இதை நான் கூறியதாக அவனிடம் கூறாதே.

ப

சில நாட்களுக்குப் பின் ஒர் இரவில், அர்ஜுனன் சாப்பிட்டுக் கொண்டிரு க்கும் போது காற்று வீச விளக்கு அணைந்தது.
ஆனால் உணவை நிறுத்தாமல் பழக் கத்தின் காரணமாக, அர்ஜுனன் சரியாகச் சாப்பிட்டான்.
பழக்கத்தின் நன்மை சட்டென்று அர்ஜுனனிடம் ஒரு விழிப்பை ஏற்படுத்தியது.
அன்றுமுதல் இரவில் இருட்டில் வில்லில் பயிற்சி செய்யலானான். டங்கார ஒலியைக் கேட்ட துரோணர்....
அர்ஜுனனைத் தழுவிக் கொண்டு கூறினார்.
வில்லேந்து பவர்களிலே உன்னை இணை- யற்றவனாக்கு- கிறேன் அர்ஜுனா!
தரையில், குதிரை மீதமர்ந்த- படி, தேரில் இருந்தபடி போரிட, கதை, ஈட்டி, வாள் போன்ற ஆயுதங்களையும் மற்றும் அஸ்திரங்களையும் பயன் படுத்த அர்ஜுனனுக்குக் கற்பித்தார்.
அர்ஜுனனின் வல்லமை வெகு தூரத்திலுள்ள அரச குமாரர்களையும் துரோண- ரிடம் பயிற்சி பெற அழை- த்து வந்தது. அப்படி வந்தவர் களில் ஒருவன், நிஷாத நாட்டு மன்னன் மகன் ஏகலைவன்.

குரு இளவரசர்களின் தகுதி-யையும், சில விதிமுறை-களைக் கடைப் பிடிக்க வேண்டியும் ஏகலைவனை ஏற்கவில்லை துரோணர்.
ஆனால் ஏகலைவன் ஆசா-னை துரோணரின் பாதங்களில் சிரம் வைத்து வணங்கி..
..கானகத்துக்குப் போய் துரோணரைப்போலவே மண்ணி-னால் சிலை செய்து..
..அதையே தன் குருவாகக் கருதி வழிபட்டு..
..சிலையின் முன் பயபக்தியோடு வில் வித்தைகளைப் பயில-னான்.
விரைவிலேயே. குருவிடம் கொண்ட பக்தியினாலும் இலட்சியத்தில் கொண்ட உறுதியினாலும் வில் வித்தைகளில் வல்லவனானான்.



ஒருநாள், குரு இளவரசர்கள், அந்தக் காட்டுக்கு பரிவாரங்களுடன் வேட்டையாட வந்தனர் நாயுடன்.
கூட்டத்திலிருந்து பிரிந்த நாய் ஏகலைவன் இருப்பிடம் வந்து குரைத்தது பலமாக.
ஏகலைவன் ஏழு அம்புகளை நாயின் வாயை நோக்கிச் செலுத்தினான்.

பிளந்த வாயுடன் நாய், பாண்டவர்களிடம் ஓடியது. அவர்கள் திகைத்தார்கள்..
.. இத்தகைய வல்லமைமிக்க வில்லாளியைக் காட்டில் தேடினார்கள்.
அங்கு ஏகலைவன் அயராது பயிற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள்.
கானகவாசியாகத் தோன்றிய அவனை அவர்களுக்கு அடையாளம் தெரியவில்லை
யார் நீ?
அவன் கூறினான்.
வீரர்களே! நிஷாத மன்னன் இரண்ய தனுசுவன் மகன் நான். துரோணரிடம் வில் வித்தை பயிலும் சீடன் நான்.
அவனைப் பற்றி அந்த பாண்டவர்கள், துரோணரிடம் வந்து நடந்தவைகளைக் கூறினார்கள்.


ஏகலைவனின் திறமை பற்றி நீண்ட நேரம் சிந்தித்த அர்ஜுனன் தன் குரு-வைத் தனிமையில் சந்தித்துக் கூறினான்.
என்னை அழைத்து ஆசி கூறினீர்கள். சீடர்களில் சிறந்த-வனாக என்னை ஆக்குவதாக வாக்களித்தீர்கள்.
ஆனால் உங்கள் இன்னொரு சீடன் நிஷாத மன்னனின் மகன் வில் வித்தையில் என்னை மிஞ்சி நிற்கிறான்.
துரோணர் சிந்தனையிலாழ்ந்தார் பிறகு ஒரு முடிவோடு, அர்ஜுனனுடன் நிஷாத இளவரசனிடம் போனார். அங்கு ஏகலை-வன் ஏகாக்ர சிந்தையுடன் பயிற்சி செய்வ-தைக் கண்டார்.
தன் குருவைக் கண்ட ஏகலைவன் அவரை சாஷ்டாங்கமாக வணங்கினான்.
பிறகு கை கட்டிப் பணிவுடன் நின்-றான். துரோணர் கூறினார்.
சீரமிக்கவனே! நீ உண்மையில் என் சீடனானால் குருதட்சிணை-யைக் கொடு

அதைக் கேட்டு மகிழ்ந்த ஏகலைவன் பதிலளித்தான்.
ஆச்சார்யதேவா! நீங்கள் எதைக் கேட்டாலும் தரச் சித்தமாக இருக் கிறேன்.
ஆணையி டுங்கள் குருவே.
துரோணர் கூறினார்.
உன் வலக் கரத்தின் பெருவிரலைக் கொடு.
துரோணரின் இக் கொடிய வார்த்தை- களைக் கேட்ட சத்தியத்- தின் வழி நடக்கும் ஏகலை- வன் மகிழ்ச்சியோடு தன் வலது கைப் பெருவிரலை துண்டித்துத் துரோணரி டம் கொடுத்தான்.
இதன் பிறகு நிஷாத ராஜகுமாரன் தன் நான்கு விரல்களால் அம்புகளைத் தொடுக்க லானான். ஆனால் பழைய வல்லமை போய்விட்டது.


துரோணரின் மாணாக்கர்களில் இருவர்
கதாயுதத்தில் வல்லவரானார்கள்.
கௌரவர்களில் துரியோதனனும்
பாண்டவரில் பீமனுமே அவ்விருவர்.
ஒருவர் மீது மற்றவருக்
குப் பொறாமை எப்போதும்.

அஸ்வத்தாமன் ரகசியமான
ஆயுதப் பிரயோகங்களிலும்
நகுல சகதேவர்கள் வாட்போரிலும்
வல்லவர்களாக விளங்கினார்கள்.


தேரோட்டுவதில் எல்லாரை-
யும் தோற்கடித்தான்
யுதிஷ்டிரன்.

ஆனால் அர்ஜுனன் மட்டுமே எல்லாக் கலைகளி-லும் வல்லவனாக விளங்கினான். மதிநுட்பம், பலம், சமயோசித அறிவு, குருபக்தி இவற்றி-லும் எல்லாருக்கும் மேலாக இருந்தான். கற்பித்தது எல்லாருக்கும் ஒன்றானாலும் அர்ஜுனன் மட்டுமே தனித்துப் பிரகாசித்-தான்.
எல்லாக் கலைகளையும் கற்-பித்தபின் தம் மாணாக்கர்-களைப் பரீட்சிக்க விரும்-பினார் துரோணர். பொம்-மைப் பறவை ஒன்றை மரத்-தின் உச்சியில் பொருத்தினார் இலக்காக.
பிறகு இளவரசர்களையெல்-லாம் அங்கு அழைத்துக் கூறினார்.
உங்கள் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு அப் பறவையின் தலையைத் துண்டிக்கத் தயாராக இருங்கள்

எல்லாருக்கும் வரிசையாக ஒரு வாய்ப்பளிக்கிறேன்.
யுதிஷ்டிரனை முதலாவதாகத் தேர்ந்தெடுத்தார் துரோணர்.
வில்லிலே நாணேற்றி குறிவை. நான் உத்தரவளித்ததும் அம்பு எய்ய வேண்டும்.
யுதிஷ்டிரன் வில்லிலே அம்பைப் பூட்டி நாணை இழுத்ததும் துரோணர் கேட்டார்.
மரத்தின் உச்சியில் பறவையைப் பார்க்கிறாயா?
யுதிஷ்டிரன் பதிலளித்தான்.
ஆம்.



துரோணர் மீண்டும் கேட்டார்.
என்ன, இம்மரத்தை, உன் சோதரர்களைப் பார்க்கிறாயா?
யுதிஷ்டிரன் கூறினான்.
ஆம், உங்களை, மரத்தை என் சோதரர்களை அப்பறவையை சகலத்தையும் துல்லியமாகக் காண்கிறேன்.
யுதிஷ்டிரன் பதிலில் வெறுப்புற்ற துரோணர் கூறினார்.
ஒதுங்கி நில். உன்னால் பறவையை வீழ்த்த முடியாது.
பிறகு துரோணர் இதே கேள்வியை துரியோதனனிடமும் மற்ற திருதராஷ்டிர புத்திரர்களிடமும், பீமன் மற்றும் அரச குமாரர்களிடமும் கேட்க எல்லோரும் தாங்கள் துரோணரை, மரத்தை, சகோதரர்களை, பறவையைப் பார்ப்பதாகக்கூறி தகுதி இழந்தார்கள்.

பிறகு துரோணர் அர்ஜுனனிடம் கூறினார்.
அதுதான் இலக்கு. அதை நீ வீழ்த்தவேண்டும். வில்லில் நாணை ஏற்று. உத்தரவு தருகிறேன்.
அர்ஜுனன் நாணை ஏற்ற துரோணர் கேட்டார்.
பறவையைப் பார்க்கிறாயா? மரத்தை, என்னை?
அர்ஜுனன் கூறினான்.
உங்களையோ மரத்தையோ பார்க்கவில்லை. பறவையை மட்டுமே பார்க்கிறேன்.
அந்தப் பதிலில் மகிழ்ந்த துரோணர் மீண்டும் கேட்டார்.
அப்படியானால் அப்பறவையைப் பற்றிக் கூறு.
கூறினான்.
பறவையின் தலையை மட்டுமே பார்க்கிறேன். உடலை அல்ல.



COMICS PDF TIMES

சில நாட்களுக்குப் பிறகு, துரோ-
ணர் தம் சீடர்களுடன் கங்கை-
யில் நீராடப்போனார்.
துரோணர் நதியில் இறங்கியதும்
ஒரு பெரிய முதலை அவர் தொடையைக்
கௌவி
யது.
அதனிடமிருந்து விடுபடும் வல்லமை
அவருக்கிருந்தாலும், உதவிக்குக்
கூவினர்.
இதைக் கொன்று என்னைக் காப்பாற்றுங்கள்.
அவர் சொல்லி முடிக்கு முன்பாகவே அர்ஜுனன்
ஐந்து அம்புகளால் அதைக் கொன்றான். மற்ற
வர்கள் பிரமிப்பும் குழப்பமுமடைந்து
நின்றார்கள்.

அர்ஜுனனின் அம்புகள் முதலையை கண்டதுண்டமாக்கி துரோணரை விடுவித்தது.
பேருவகைக் கொண்ட அவர் அர்ஜுனனிடம் கூறினார்.
மிக உயர்ந்த வெல்லமுடியாத வல்லமைமிக்க இந்த பிரம்மாஸ்திரத்தை அதைப் பிரயோகிக்கும் ரகசியங்களுடன் ஏற்றுக் கொள்.
மூவுலகிலும் இதற்கு இணை கிடையாது. உன் உடலையும் உள்ளத்தையும் ஒருமுகப்படுத்தி இதைப் பெற்றுக் கொள்.

இதை மனிதர்கள் மீது பிரயோகிக்காதே. சாதாரண விரோதியின் மீது ஏவினால் இது இப்புவுலகையே சாம்பலாக்கிவிடும்.
மனிதர் இல்லாத விரோதிகளின் மீதே இதைப் பிரயோகிக்கவேண்டும்.
அர்ஜுனன் அவ் உயர்ந்த அஸ்திரத்தைப் பணிவுடன் ஏற்று குருவின் ஆணைப்படி நடப்பதாக வாக்களித்தான். துரோணர் மீண்டும் கூறினார்.
வில்வித்தையில் இவ்வுலகில் உன்னை மிஞ்சுபவர் யாருமில்லை. வெல்லமுடியாதவனாக விளங்குவாயாக.
இப்படியாகத் துரோணர், தன் இளமைப் பருவத்துத்தோழன் துருபதனைப் பழிவாங்குவதற்கு உதவும் மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளித்து உருவாக்கினார்.
வைசம்பாயனர் படனம் செய்த வியாச பாரதத்தின் ஐந்தாம் பகுதி முடிவுற்றது.

செய்திகள் வாசிப்பது

✻ பூந்தளிர் அமர் சித்திரக்கதை ✻

★ இலங்கைத் தமிழர்களின் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஓர் உடன்பாட்டை ஏற்படுத்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் முயன்று வருகிறார்.

★ திட்டக் கமிஷனின், ஏழாவது திட்டத்துக்கான, ரூ 1,80,000 கோடி வரையறுப்பை அரசு அங்கீகரித்துள்ளது.

★ போபால் விஷ வாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 5-லிருந்து 10 வருஷங்கள் வரை சிகிச்சை தேவைப்படுமாம்.

★ சாடலைட் பணிகளின் தேவை வரவர அதிகமாவதினால் பாரதம் 1987ல் மற்றொரு சாடலைட்டை அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

★ போபாலில் ஆரம்பித்தது விஷவாயுக் கசிவு. இப்போது உலகமெங்கும் விஷவாயுக் கசிவு பற்றிய தகவல்கள் வந்த வண்ணமிருக்கின்றன. சீனாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள டியூஷன் நகரில் குளோரின் விஷவாயுவினால் தாக்குண்டு 2,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

★ அஸ்ஸாமில் தேர்தல்கள் டிசம்பரில் நடக்கலாம் என்று முதல்வர் ஹித்தேஷ்வர் சைக்கியா அபிப்பிராயப்படுகிறார்.

★ மெக்சிகோ நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தில் 20,000 பேருக்கும் அதிகமான மக்கள் மாண்டதாகவும் மெக்சிகோ நகரின் வட கிழக்குப் பகுதி அனேகமாகத் தரைமட்டமாகி அழிந்து விட்டதாகவும் செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

★ ஜப்பானில் ஏற்பட்ட நில நடுக்கத்தினால் உயிரின் சேதமோ கட்டிடங்கள் சரியவோ இல்லை. காரணம், பூகம்பத்தினால் பாதிக்கப்படாத முறையில் புதிய உத்திகளைக் கையாண்டு கட்டிடங்களை எழுப்பி இருக்கிறார்கள் ஜப்பானியர்கள். இது விந்தையான விஷயமல்லவா !

★ சென்னை கிறிஸ்துவக் கல்லூரியின் மேல் நிலைப் பள்ளிக்கு வயது 150. எழும்பூர் புனித அந்தோணியார் சர்ச்சில் 1835ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இந்த பள்ளி. இப்போது 150 வது வருட விழாக் கொண்டாடுகிறது.

★ படகில் உலகைச் சுற்றி வரும் முயற்சியில் பத்து பேர்கள் ஈடுபட்டுள்ளனர். இப்படகு பம்பாயிலிருந்து கிளம்பி எல்லாக் கடல்களிலும் சுற்றி வர 18 மாதங்களாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

★ செடிகளுக்கு நோயே வராமல் தடுக்கும் புதிய மருந்தை ரஷ்ய உயிரியல் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கின்றனர்.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN

பூந்தளிர் அமர் சித்திரக்கதை

அடுத்த

டிசம்பர் 25ந் தேதி வெளிவருகிறது

மகாசிவனுக்குத்
தன் கண்களையே
அளித்த பக்தனின் கதை

கண்ணப்பர்

.. 36195/84
Poontalir
AMAR CHITRA KATHA
T-N/MS (c) 744
[…]ember 10
Price : Rs. 1.50